**சுருக்கம்**

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – "சிக்கிக்கு சிக்கிக்கிச்சு" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு கோரிக்கை நிராகரித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை**

**அரசாணை (டி) எண். 277**

**நாள். 08.07.2014**
**ஜய, ஆனி 24,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:-**

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.02, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் கடித எண்.சட்டக் குழு-4/6696/2014, நாள் 25.03.2014 தேர்வுக்குழு எண். 147/2013-2014.
4. திரு ந.ராஜேஷ்குமார், தயாரிப்பாளர் அவர்களின் 10.4.2014 நாளிட்ட மனு.

-----

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைள் வரிச் சட்டம், 1939-ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. முதன்மைச் செயலர் / வணிகவரி ஆணையர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு "சிக்கிக்கு சிக்கிக்கிச்சு" தமிழ் திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. “சிக்கிக்கு சிக்கிக்கிச்சு” தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட தேர்வுக் குழு உறுப்பினர்கள் பின்வருமாறு தங்கள் பரிந்துரைகளை அளித்துள்ளனர்:-

| வ. எண் | உறுப்பினர் திரு/திருமதி | பரிந்துரை |
|---|---|---|
| 1. | C.பழனி, இணை ஆணையர் (வவ) சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை 6. | “சிக்கிக்கு சிக்கிக்கிச்சு” என்ற தமிழ் படம் ‘U’ தணிக்கை சான்றிதழ் பெற்ற திரைப்படம் என்பதாலும், சிக்கி என்பது திரைப்படத்தின் கதாநாயகனின் பெயர் – சிக்கிகிச்சி என்பது வழக்கு மொழி தமிழ் சொல்லாகும் என்பதாலும் திரைப்படத்தில் வன்முறை மற்றும் ஆபாசக் காட்சிகள் இல்லை என்பதாலும், வேற்று மொழி கலப்பு வசனங்கள் மிகவும் குறைவு என்பதாலும், திரைப்படத்தின் கதை தமிழ் பண்பாடு மற்றும் கலாசாரத்தை ஒன்றி உள்ளது என்பதாலும் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு தர பரிந்துரை செய்துள்ளார். |
| 2. | ந.அருள் இயக்குநர் (மொழிபெயர்ப்பு) தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை | ‘U’ சான்றிதழ் பெற்ற திரைப்படம் என்பதாலும், கதையின் கரு மொழி பண்பாட்டிற்குரிய படமாக உள்ளதாலும், திரைப்படத்தில் பிற மொழிச் சொற்கள் பெருமளவில் இல்லையென்றாலும், தலைப்பில் ஆங்கில சொல் தவிர்த்தல் வேண்டும் என்றும், திரைப்படத்தில் வன்முறை மற்றும் ஆபாசம் இல்லை என்பதாலும், இத்திரைப்படம் வரி விலக்கிற்கு தகுதியான படம் என பரிந்துரை செய்துள்ளார். |
| 3. | C.V.ராஜேந்திரன், இயக்குநர் | ‘U’ சான்றிதழ் பெற்ற திரைப்படம் என்பதாலும், தமிழ் பண்பாட்டிற்கு ஏற்ற அந்நிய மொழி அதிகமாக கலக்காத திரைப்படம் என்பதாலும், ஆபாசம் மற்றும் வன்முறை இல்லாத திரைப்படம் என்பதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என பரிந்துரை செய்துள்ளார். |
| 4. | பாபு என்கிற N.V.அனந்த கிருஷ்ணன், ஒளிப்பதிவாளர் | ‘U’ சான்றிதழ் பெற்ற திரைப்படம் என்பதாலும், திரைப்படத்தில் தமிழ் மொழி சீராக உள்ளது என்பதாலும், திரைப்படத்தில் வன்முறை, ஆபாசம் மற்றும் பிற மொழி கலப்படம் எதுவும் இல்லை என்பதாலும், நிபந்தனைக்கு உட்பட்டு உள்ளதாலும், இத்திரைப்படம் கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியானது என பரிந்துரை செய்துள்ளார். |

| | | |
|---|---|---|
| 5. | L.R.ஈஸ்வரி<br>பின்னணிப் பாடகி | திரைப்படத்தின் தலைப்பில் ஆங்கில சொல்லை தவிர்த்து இருக்கலாம் என்றும் 'U' சான்றிதழ் பெற்ற திரைப்படம் என்பதாலும், கதையின் கரு தமிழ் பண்பாட்டிற்கு உரியதாக உள்ளது என்பதாலும், வன்முறை மற்றும் ஆபாசம் ஏதுமில்லாத திரைப்படம் என்பதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்கத் தகுதியானது என பரிந்துரை செய்துள்ளார். |

4. மேற்கண்ட சூழ்நிலையில், "சிக்கிக்கு சிக்கிக்கிச்சு" திரைப்படத்தினை பார்வையிட்ட ஐந்து உறுப்பினர்களும் இத்திரைப்படத்திற்கு வரி விலக்கலாமென பரிந்துரைத்துள்ள போதிலும், திரு.ந.அருள், இயக்குநர் (மொழி பெயர்ப்பு) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை மற்றும் திருமதி L.R.ஈஸ்வரி, பின்னணிப் பாடகி ஆகியோர் இத்திரைப்படத்தின் தலைப்பில் ஆங்கிலச் சொல் தவிர்த்தல் வேண்டும் என தெரிவித்துள்ளார்கள். இந்நிலையில், இத்திரைப்படத்தின் தயாரிப்பாளர் திரு.ந.ராஜேஷ்குமார் திரைப்படத்தின் தலைப்பில் உபதலைப்பாக "Chikikichu" எனும் ஆங்கிலச் சொல்லை பயன்படுத்தி உள்ளதாகவும் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே, "சிக்கிக்கு சிக்கிக்கிச்சு" என்ற திரைப்படத்தின் தலைப்பில் "Chikikichu" என்ற ஆங்கில உபதலைப்பு பயன்படுத்தப்பட்டுள்ளதாலும், அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை, நாள் 21.07.2011-க்கு முரணாக உள்ளதாலும், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939-ன் பிரிவு 8, உட்பிரிவு 2ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, "சிக்கிக்கு சிக்கிக்கிச்சு" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு கோரிக்கை நிராகரித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை-9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை-8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை-9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

8.7.14.

பிரிவு அலுவலர்.